

மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோரின் அறிவிப்புக்கு இணங்க இளைஞரணி சார்பாக நடைபெற்ற கோடை கால நீர் மோர் பந்தலை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் முன்னிலையில் திறந்து வைத்தனர். உடன் கழக நிர்வாகிகள் விமல், ஆதவன் அதியமான், முத்துராமலிங்கம், மதன்குமார், ராமமூர்த்தி, தன பாண்டியன், ஸ்ரீதர், காளிதாஸ் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், இளைஞர் அணியினர், பொதுமக்கள் பங்கேற்றார்கள்.



கவர்னருக்கு எதிராக உச்ச நீதிமன்ற தீர்ப்பை அடுத்து திண்டுக்கலில் மாநகரச் செயலாளர் ராஜப்பா தலைமையில், மாவட்ட அவைத் தலைவர் காமாட்சி, மாவட்ட பொதுச் செயலாளர் பிலால் உசேன், மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் உட்பட நிர்வாகிகள், கழகத்தினர்கள் திண்டுக்கல் பேருந்து நிலையம் முன்பு பயணிகளுக்கு இனிப்பு வழங்கி வெடி வெடித்து கொண்டாடினர்.

### கோபிசெட்டிபாளையம் - ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை விரிவாக்கம் குறித்த கவன ஈர்ப்பு!

# தொழில்நுட்ப குழுவினை அனுப்பி பரிந்துரையைப் பெற்று நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பதில்!

சென்னை, ஏப். 10-

சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் உள்ளிட்ட உறுப்பினர்கள் “ஈரோடு மாவட்டம, கோபிச் செட்டிபாளையம் வட்டம், ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை விரிவாக்கம் குறித்து” சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.



இதற்கு பதிலளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

தங்கம் தென்னரசு: செங்கோட்டையன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த ஸ்ரீபவானி டெக்ஸ்டைல் பிராசசர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் 1984 ஆம் ஆண்டு துவங்கப்பட்டதிலிருந்து பல்வேறு நிலைகளைச் சந்தித்து, தற்போது இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும், அவர்கள் அரசிடமிருந்தோ அல்லது மாசுக் கட்டுபாடு வாரியத்திடமிருந்தோ இசைவாணையைப் பெற்று, விரிவாக்கத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த நீண்ட நெடிய காலங்களில் அவர்களுக்கு பல முறை அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இறுதியாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதற்குப் பிறகு இசைவாணை வழங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள், இந்த மன்றத்திலும் ஒரு கேள்வி வாயிலாக, இதற்கு உடனடியாகத் தீர்வு காணக் கூடிய வகையில் அதன் இசைவாணைகளை இரத்து செய்ய வேண்டும் என்றும், விரிவாக்கத்திற்கான எந்த வித இசைவினையும் அளிக்கக்கூடாது என்றும் தெரிவித்திருந்தார்கள். அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களும் பல்வேறு போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களும் அதுகுறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்கள்.

பவானி ஆற்றின் கரையோரங்களில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் உள்ளிட்ட முக்கியமானோர்களெல்லாம் முதலமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து, இந்தப் பிரச்சினை பற்றி எடுத்துச் சொன்ன போது, அவர்கள், எந்தக் காலகட்டத்திலும் விவசாயிகளோ, விளைநிலங்களோ, பாசனமோ பாதிக்காத வகையிலும், அதேபோன்று எந்த விதமான சூழ்நிலையிலும் குடிநீர் வழங்குவதில் எந்த வித பாதிப்பு வராத வகையிலும் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மிக உறுதியாக அவர்களிடத்தில் தெரிவித்தார்கள்.

**மகிழத்தக்க அளவில் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்!**

இதுவரை அங்கே விரிவாக்கத்திற்கான எந்தவிதமான பணிகளும் துவங்கப்பட வில்லை. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் இங்கே கூறியிருப்பதுபோல், விவசாயப் பெருங்குடி மக்களின் நலனை கருதியும், அரசின் சார்பில் விரைவில் ஒரு தொழில்நுட்பக் குழுவினை அங்கே அனுப்பி, அந்தத் தொழில்நுட்பக் குழுவினுடைய பரிந்துரையைப் பெற்று, நான் இந்த மன்றத்தில் அவர்களுக்கும் தெரிவிப்பேன். விவசாய பெருங்குடி மக்களுக்கும் தெரிவிப்பேன். விவசாய பெருங்குடி மக்கள் மகிழத்தக்க அளவில், உங்களுடைய எதிர்ப்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில், குறிப்பாக இந்தப் பிரச்சினையை தொடர்ந்து இந்த அவைக்குத் தெரிவித்திருக்கக்கூடிய உறுப்பினர் அண்ணன் செங்கோட்டையன் அவர்கள், அதுகுறித்து அவர்களும் மகிழத்தக்க அளவில் நடவடிக்கைகளை நிச்சய மாக அரசு மேற்கொள்ளும்.

செங்கோட்டையன் அவர்கள் சொன்னதுபோல், அது நல்ல செய்தியாக அமைய வேண்டுமென்கிற காரணத்தினால்தான் நான் சட்டமன்றத்தில் நேரடியான ஓர் அறிவிப்பினை வெளியிடவில்லை. ஏனென்றால், சட்டமன்றத்தில் நான் *leading* ஆக ஒன்றைச் சொல்லிவிட்டால், நாளைக்கு அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறபோது, அது பிரச்சினைக்குரியதாக இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு வந்துவிடும். எனவேதான், ஒரு தொழில்நுட்பக் குழுவை அனுப்பி, அவர்களுடைய பரிந்துரையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் அது சரியான முறையில் இருக்கும். *Caveat* போடுகின்றபோது, நிச்சயமாக சட்ட வல்லுநர்களை நீங்கள் குறிப்பிட்டவாறு ஆராயப்படும்.

**ஆற்று நீரை மாசுப்படுத்தும் செயலை அனுமதிக்க முடியாது!**

ஏனென்றால், அதற்கு எந்தவிதமான *cause of action* இது வரையில் வரவில்லை. நான் ஒரு நடவடிக்கை எடுத்து, அதற்குப் பிறகு அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலை வந்தால், நாம் அதற்கு முன்பாக *caveat* நிச்சயமாகப் போடுவதற்குரிய நடைமுறைகளை நாம் பார்க்கலாம்.

பொதுவாக, நம்முடைய மேட்டுப்பாளையம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.கே. செல்வராஜ் குறிப்பிட்டதைப்போலவும், மற்ற இடங்களில் இருக்கக்கூடிய சாயப் பட்டறை கழிவுகள் குறித்தும் அரசு முழுமையாகக் கவனத்தில் கொண்டிருக்கிறது. எந்த இடங்களிலும் சாயக் கழிவுகள் ஆற்றில் கலந்து, ஆற்றுநீரை மாசுப்படுத்தக்கூடிய இந்தச் செயலை அனுமதிக்க முடியாது.

அதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி யிருக்கிறேன். விரிவான விவரங்களை மானியக் கோரிக் கையின் விவாதத்தின்போது, நான் அதில் தெரிவிக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்தார்.




தேனி வடக்கு போடி நகர பகுதியில் இல்லம் தோறும் மாணவர்கள் உறுப்பினர் சேர்க்கை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. உடன் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன் நகர செயலாளர் புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சங்கர் இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான், துணை அமைப்பாளர்கள் சுதந்திரம், நிபந்தன்குணா, தங்கபாண்டியன், ராதாகிருஷ்ணன், நகர் இளைஞர் அணி அமைப்பாளர் சேக் அப்துல்லா மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இளம்பரிதி

**ஏப்ரல் 10 (1995)**



**பழம்பெரும் இயக்கத் தோழர், சென்னை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர், பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்.**

**“சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்து அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றைக்கும் மறக்கக்கூடியவை அல்ல! தமிழகம் முழுதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் சுற்றுப்பயணம் செய்து இந்த இயக்கத்தின் அடித்தளத்தை வலுப்படுத்தியவர்” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1988ஆம் ஆண்டு முப்பெரும் விழாவின்போது தலைமைக் கழகச் சார்பில் பெரியார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கீழடி அருங்காட்சியக - நான்கு வழிச்சாலையில்

# நகரும் படிக்கட்டுடன் கூடிய மேம்பாலம் அமைத்திடுக!

## சட்டப் பேரவையில் ஆ.தமிழரசி கேள்வி!

சென்னை, ஏப். 10-

மானாமதுரை தொகுதியில் கீழடி அருங்காட்சியகம் செல்லும் நான்கு வழிச் சாலையில் நகரும் படிக்கட்டு மேம்பாலம் அமைத்திடுக என்று உறுப்பினர் ஆ.தமிழரசி கேள்வி எழுப்பினார்.



இதன் விவரம் வருமாறு:-

**தமிழரசி:** என்னுடைய தொகுதியான மானாமதுரை தொகுதியில், கீழடி அருங்காட்சியகத்திற்கு செல்ல நான்குவழிச் சாலையைக் கடக்கும்போது அதிக விபத்துகள் ஏற்டுகின்றன. அமைச்சர் அவர்கள் கீழடி அருங்காட்சியகத்தைப் பார்வையிடுவதற்காக வருகின்ற போதெல்லாம், அங்கு நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய ஒரு மேம்பாலம் அமைத்துத் தரப்படும் என்று கூறினார். இதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன், நில அளவீடும் எடுக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தை எப்போது அமைத்துத் தருவார்கள்?

**எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சகோதரி குறிப்பிட்டதைப்போன்று, கீழடி அருங்காட்சியகம் என்பது தமிழர்கள் அடையாளத்தின் மொத்த உருவமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அருங்காட்சியகத்திற்கு செல்ல வேண்டும் என்றால், ஒன்றிய அரசாங்கத்தினுடைய சாலையைக் கடந்துதான் செல்ல வேண்டிய சூழ்நிலை ஒருபக்கம் இருக்கிறது. அப்படியே சென்றாலும், கீழடி அருங்காட்சியகத்திற்கும், மெயின் ரோடுக்கும் இடையே உள்ள சாலை மிகக் குறுகிய சாலையாக இருக்கிறது.

அது ஒன்றிய அரசாங்கத்தினுடைய சாலையாக இருக்கிறது. அதை விரிவுப்படுத்த வேண்டும் என்று ஏற்கெனவே சம்பந்தபட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்து, அதற்கு அருகில் உள்ள இடங்களை கையகப்படுத்த வேண்டிய பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். சகோதரி தெரிவித்ததைப் போன்று, அங்கு நகரும் படிக்கட்டுகளை அமைக்க வேண்டும் என்பதற்காக திட்ட மதிப்பீடுகளை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பணிகள் தொடரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஒன்றிய அரசு நிதி எதையும் தரவில்லை! மீனவர் நலனுக்காக

# ரூ.576 கோடியில் திட்டங்களை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## சட்டப் பேரவையில் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பேச்சு!

சென்னை, ஏப். 10-

சட்டப் பேரவையில் விதி 110ன் கீழ் மீனவர் நலனுக்காக ரூ.576 கோடியில் திட்டங்கள் அறிவித்த முதல்வருக்கு அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நன்றி தெரிவித்ததுடன் ஒன்றிய அரசாங்கம் நிதி எதையும் தரவில்லை என்றும் குறிப்பிட்டார்.



இதுகுறித்து அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பேசியதாவது:-

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து, மீனவர்கள் வாழ்வில் உயர்வதற்காக, பல்வேறு நலத் திட்டங்களைத் தந்திருக்கின்ற முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இன்றைக்கு அறிவித்திருக்கின்ற திட்டங்களெல்லாம் எங்களுடைய ஒன்றிய அரசாங்கத்தின்மூலம்தான் தருகின்ற திட்டங்கள் என்று பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அத்தனையும் தமிழ்நாடு அரசு தருகின்ற திட்டங்களில்தான் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 576 கோடி ரூபாய்க்கு திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த இரண்டு வருட காலமாக, ஒன்றிய அரசாங்கமும், நம்முடைய அரசாங்கமும் சேர்ந்து செய்யக்கூடிய பணிகளுக்கான நிதியினை தராமல், இன்றைக்கு இரண்டு வருடங்களாக நாங்கள் அறிவித்த திட்டங்களெல்லாம் நடை பெறாமல் இருக்கக்கூடிய நிலைகளும் இருக்கின்றன என்பதை நான் சட்டமன்ற உறுப்2பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வகையிலே, மீனவர்களுடைய வாழ்வு உயர்வதற்காக இன்றைக்கு விதி 110ன்கீழ் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பத்தோடு, அதிலும், குறிப்பாக மன்னார் வளைகுடா பகுதியைச் சேர்ந்த மீனவ மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் நன்றி தெரிவித்து பேசினார்.



தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதி பாகம் எண் 42ல் ”இல்லம் தோறும் மாணவர் அணிஉறுப்பினர் சேர்க்கையை கழக மாணவர் அணிச்செயலாளர் இரா.ராஜீவ்காந்தி மற்றும் தென்காசி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ராஜா ஈஸ்வரன் ஆகியோர் இணைந்து துவக்கி வைத்தார்கள்.இதில் ஏராளமான கல்லூரி மாணவர்கள் ஆர்வமுடன் தங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டனர்.



நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர மக்களை கோடைக் கால வெப்பத்தில் இருந்து காக்கும் வகையில் பாளையங்கோட்டை சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை எதிரில் அமைக்கப்பட்டிருந்த ”தண்ணீர் நீர்மோர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் ஆலோசனைபடி நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர்,மோர்,சர்பத், தண்ணீர்,தர்பூசணி போன்றவற்றை வழங்கினார்.உடன் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், இனியன்,மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், தலைமை கழக பேச்சாளர் மைக் மணி,மற்றும் வினோத்குமார், ராஜேஸ்வரி,அனித்தா,ஆனி ராக்லேண்ட்,ஜோதி பிரியா,ஏஞ்சலின், அருள்ராஜ்,பால சரவணன்,குமார்,சங்கர்,உள்பட பலர் உள்ளனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மாயா செய்திருந்தார்.